**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.626/2025
Sessions)

( Prosecution P.W.2
Deposition of witness for (Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | முத்துலெட்சுமி | -- | |
| Husband's Name | மாரியப்பன் | Calling | கூலி |
| Village | வேட்டாரம்பட்டி | Religion | |
| Taluk | தென்காசி | Age | 62 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of January 2026.

Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது தென்காசி மாவட்டம், தென்காசி தாலுகா வேட்டாரம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். எனது கணவர் மாரியப்பன் முகவூரில் தங்கியிருந்து தளவாய்புரத்தில் உள்ள ஸ்ரீ கிருஷ்ணா நெல் அரவை மில்லில் வேலை பார்த்து வந்தார். எங்களுக்கு மலர்க்கொடி, கலைச்செல்வி, தீபா ஆகிய 3 மகள்கள் உள்ளனர். எனது கணவர் வாரம் ஒரு முறை கட்டாயமாக என்னைப் பார்க்க வருவார். சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு எங்களது குடும்பத்துடன் நாங்கள் மம்சாபுரத்தில் உள்ள முனியாண்டி கோவிலுக்கு சாமி கும்பிட சென்றிருந்தோம். சாமி கும்பிட்டுவிட்டு நாங்கள் ஊருக்குச் சென்றுவிட்டோம். எனது கணவர் மட்டும் முகவூர் சென்றுவிட்டார். மறுநாள் நான் தோட்டத்தில் பூப்பறிக்கச் சென்றிருந்தபோது எனது பேரன் என்னிடம் வந்து எனது கணவர் மாரியப்பனுக்கு புதுப்பட்டி அருகில் வைத்து அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்டிருப்பதாக கூறினான். உடனடியாக நான் எனக்குத் தெரிந்தவரிடம் இரவலாக 100 ரூபாய் பெற்றுக்கொண்டு பஸ் ஏறி திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு வந்து விசாரித்தபோது எனது கணவரை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றிருப்பதாக தெரிவித்தார்கள். அதனால் நான் மீண்டும் வேட்டாரம்பட்டிக்கு வந்து விட்டேன். நான் வேட்டாரம் பட்டிக்கு வந்து இறங்கியவுடன் எனது உடன் பிறந்த அண்ணனின் மகன் என்னிடம் வந்து எனது கணவர் மாரியப்பன் இறந்துவிட்டதாக தெரிவித்தார். நான் மதுரை சென்று எனது கணவரை பார்ப்பதற்கு எனக்கு பணவசதி எதுவும் இல்லாததால் நான் வீட்டிலேயே இருந்துவிட்டேன். எனது கணவரின் பிரேத பரிசோதனை முடிவடைந்த பின்னர் பிரேதத்தை வீட்டுக்கு கொண்டு வந்த பின்னர் நான் பார்த்தேன். இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. அதனால் எந்த வாகனம் எப்படி வந்தது என்ற விபரம் எனக்குத் தெரியாது. என் கணவரின் இறப்பிற்கு இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். அதிக நஷ்ட ஈடு வாங்குவதற்காக போலிசார் சொல்லிக் கொடுத்தபடி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of January 2026.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

M VEERANAN

Digitally signed by M VEERANAN
Date: 2026.01.19 11:48:06 +0530

**Chief Judicial Magistrate,
Virudhunagar District at
Srivilliputtur.**